**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 22.01.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 1

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திருமதி. ராணி என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராணி | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

(எதிரி சுப்ரமணியன் என்ற அஜித் ஆஜர் )

<u>முதல் விசாரணை:</u>

நான் இராமநாதபுரம் தாலுகா, இருட்டு ஊரணி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். சலவைத் தொழில் செய்து வருகிறேன். சாட்சி அனிதா எனது மகள். சாட்சி பால்பழனி எனது உடன்பிறந்த சகோதரர். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது தங்கை மகன் ஆவார். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். திருமணமாகி இருவரும் தனித்தனியே வசித்து வருகிறார்கள். கடந்த 04.04.2023ம் தேதியன்று எனது மாமியார் உடல்நலக்குறைவால் எனது வீட்டில் இறந்துவிட்டார். எனது மாமியார் இறந்தது சம்மந்தமாக 19.04.2023ம் தேதியன்று

அவருக்கு கிருபை வைத்தோம். அப்போது எங்கள் இல்லத்திற்கு எனது உறவினர்கள் வந்திருந்தார்கள். எனது கணவர் காளிமுத்து அதிகமான மது போதையில் அங்கு இருந்தார். எனது கணவர் மது போதையில் என்னிடமும் வந்திருந்த உறவினரிடமும் சண்டை போட்டார். இதனால் வந்திருந்த எனது உறவினர்கள் கோவித்துக்கொண்டு சாப்பிடாமல் சென்றுவிட்டார். எனது கணவர் உறவினர்களுடன் சண்டை போடும் பொழுது இரவு சுமார் 11.00 மணி இருக்கும். நான் சண்டையை விளக்கிவிட்டு துாங்க சென்றுவிட்டேன். எனது கணவரை காணவில்லை என்று நள்ளிரவு 01.00 மணிக்கு தேடிச்சென்ற பொழுது எனது கணவர் வீட்டிற்கு வெளியில் குப்புறக்கிடந்தார். அவரை நான் துாக்கி பார்த்த பொழுது எனது கணவருக்கு மண்டையில் காயம் இருந்தது. நான் உடனே 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து எனது கணவரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். அரசு மருத்துவர் எனது கணவரை பரிசோதித்து பார்த்துவிட்டு இறந்துபோய்விட்டதாக சொன்னார்கள். உச்சிப்புளி காவல்நிலைய போலீசார் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வந்தார்கள். எழுதாத வெள்ளைப்பேப்பரில் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து நான் போட்டதுதான். அந்த கையெழுத்து மட்டும் அ.தசா.ஆ.1 ஆகும். எனது கணவர் எவ்வாறு இறந்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. நானும் எதுவும் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. போலீசார் என்னிடம் இந்த வழக்கு சம்மந்தமாக நான் சொன்ன வாக்குமூலங்களை வீடியோவாக எதுவும் பதிவு செய்து கொள்ளவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

<u>அரசுத் தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், அப்போது கடந்த 18.04.2023 ம் தேதி எனது மாமியார் இறந்தது சம்மந்தமாக காரியம் நடத்தினோம்

என்றும், அப்போது எனது கணவர் அதிகமாக மது அருந்தி வீட்டிற்குள் இருந்து கத்திக்கொண்டிருந்தார் என நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இதனால் நானும், எனது முத்த மகள் கவிதாவும் பயந்துகொண்டு வீட்டிற்குள் படுத்திருந்தோம் என போலீசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அன்று நள்ளிரவு 01.15 மணியளவில் எனது கணவர் வெளியில் பாத்ரூம் சென்றவர் திரும்ப வராததால் நான் சந்தேகப்பட்டு வெளியே சென்று பார்த்த பொழுது விட்டு வாசலில்குப்புற கிடந்தார் என்றும், நான் சந்தேகப்பட்டு எனது மகளை கூப்பிட்டு எனது கணவரை பார்த்த பொழுது அவருக்கு உச்சந்தலையில் இரத்தக்காயம்பட்டு கிடந்தார் என்றும், உடனே நானும் பக்கத்து வீட்டை சேர்ந்த பாண்டி மற்றும் கொழுந்தன் சண்முகவேல் உதவியுடன் ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவரை பரிசோதித்த டாக்டர் இறந்துவிட்டதாக கூறினார் என்றும், இது சம்மந்தமாக நான் உச்சிப்புளி காவல் நிலையத்திற்கு காலை 10.00 மணிக்கு வந்து எனது கணவரின் இறப்பு பற்றி புகார்மனு கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் அதிகமாக குடித்துவிட்டு என்னிடமும் உறவினரிடமும் தகராறு செய்ததால் யாருமே சாப்பிடவில்லை என்றும், கதவை அடைத்துக்கொண்டு நானும் கவிதாவும் தூங்கிவிட்டோம் என போலீசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் என் உறவினரிடம் விசாரித்த பொழுது என் கணவர் குடிபோதையில் கத்திக்கொண்டு என் தம்பி பால்பழனியை அடிக்க வந்ததால் கோரவள்ளி கிராமத்தில் உள்ள என்தங்கை சுமதி மகனான ஆஜர் எதிரி சுப்ரமணியன் என்ற அஜித்திற்கு என் தம்பி போன் செய்து வரச்சொன்னதாகவும், அவரும் என் மகள் அனிதாவும் TN 65 AF 7573 என்ற யமகா ஸ்கூட்டி வண்டியில் நள்ளிரவு 01.00 மணிக்கு இருட்டூரணிக்கு வந்த பொழுது என் கணவர் எனது தம்பி பால்பாண்டியிடமும், ஆஜர் எதிரியிடமும் தகராறு செய்ததால், ஆஜர் எதிரி கீழே கிடந்த கட்டையை எடுத்துஎன் கணவரின் உச்சந்தலையில் ஓங்கி அடித்ததாகவும், என் கணவர்

மயங்கி விழுந்தவுடன் அவர்கள் இருவரும் வண்டியில்ஏறி போய் விட்டதாகவும், அதை நான் கேள்விப்பட்டேன் என்றும், கேள்விப்பட்ட விவரத்தை இந்த வழக்கு சம்மந்தமாக போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. அன்று இரவு 01.15 மணியில் நான் வெளியில் வந்து பார்த்த பொழுது என் கணவர் உச்சந்தலையில் இரத்தக்காயத்துடன் மயங்கி கிடந்ததை நான் பார்த்தேன் என்றும், அதன் பிறகு கொழுந்தன் சண்முகவேலு, சுமதி, மச்சான் வீரையா ஆகியோர் துணையுடன் என் கணவரை தூக்கி என் கணவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு மஞ்சள் தூளை தலையில் வைத்து பத்து போட்டு பிறகு தாமரைக்குளம் மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்து சேர்த்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவரை ஆஜர் எதிரி கட்டையால் தலையில் அடித்து கொன்றதை நான் மருத்துவமனையில் இருக்கும் பொழுதுதான் கேள்விப்பட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்சமயம் ஆஜர் எதிரி என் தங்கை மகன் என்பவதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 22.01.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 2

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திருமதி.அனிதா என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அனிதா | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

(எதிரி சுப்ரமணியன் என்ற அஜித் ஆஜர் )

<u>முதல் விசாரணை:</u>

நான் இராமநாதபுரம் தாலுகா கோரவள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். என் கணவர் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். அ.சா.1 எனது தாயார். சாட்சி பால்பழனி எனது சகோதரியின் கணவர். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் எனது சித்தி பையன் ஆவார். கடந்த 19.04.2023ம் தேதியன்று எனது அப்பத்தா பேச்சியம்மாளுக்கு கிருபை காரியங்கள் நடந்தது. அந்தகிருபைக்கு உறவினர்கள் அனைவரும் வருகை தந்திருந்தார்கள். எனது தகப்பனார்

குடித்துவிட்டு அடிக்கடி பிரச்சனை செய்வது வழக்கம். அன்றைய தேதியிலும் அதே போல் பிரச்சனை செய்தார். அதனால் வந்திருந்த உறவினர்கள் கோபித்துக்கொண்டு கிளம்பிவிட்டார்கள். அனது அப்பா உறவினர்களுடன் பிரச்சனை செய்த பொழுது மாலை 06.00 மணி இருக்கும். நான் எனது அப்பா பிரச்சனை செய்ததால், நான் எனது குழந்தைகளை அழைத்துக்கொண்டு எனது ஊருக்கு 06.45 மணிக்கு சென்றுவிட்டேன். அன்றைய தினம் இரவு 12.30 மணியளவில் எனது தாயார் எனக்கு போன் செய்து அப்பா கீழே விழுந்துகிடப்பதாகவும், ஆஸ்பத்திரிக்கு துாக்கிச்செல்வதாகவும், உடனே வரும்படி சொன்னார். நான் இரவு நேரம் என்பதால், ஆஸ்பத்தரிக்கு செல்லாமல் காலையில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். எனது தகப்பனார் எவ்வாறு இறந்தார் என்று எனக்குத் தெரியாது. நான் யாரிடமும் இது பற்றி விசாரிக்கவில்லை. இந்த வழக்கில் போலீசார் விசாரணையில் வீடியோ மூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

<u>அரசுத் தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், நான் கடந்த 18.04.2023ம் தேதியன்று மாலை 06.00 மணியளவில் என் அப்பத்தா இறந்துபோனதற்கு சாமி கும்பிடுவதற்காக நாங்கள் அனைவரும் இருட்டுரணியில் எனது தாயார் வீட்டில் இருந்த பொழுது என் அப்பா அதிகமாக குடித்துவிட்டு சண்டை போட்டதால் யாரும் சாப்பிடாமல் சென்றுவிட்டார்கள்என்றும், அ.சா1 ஆன எனது தாயாரிடமும் என் மாமா பால்பழனி மற்றும் என் உடன்பிறந்த சகோதரி கவிதா உள்ளிட்ட அனைவரிடமும் என் அப்பா சண்டை போட்டதால் எனது தாயாரான அ.சா.1ம்

எனது சகோதரியான கவிதாவும் வீட்டிற்குள் சென்று கதவை சாத்திக்கொண்டார்கள் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அன்றிரவு 01.00 மணியளவில் எனது மாமா பால்பழனி எனக்கும், ஆஜர் எதிரிக்கும் போன் செய்து இன்னும் என் அப்பா போதையில்தான் கத்திக்கொண்டிருப்பதாகவும், வெளியில் வந்த என் மாமாவை என் அப்பா அடிக்க வந்ததாகவும், உடனே வந்து கேளுங்கள் என என் மாமா சொன்னதால் நானும் ஆஜர் எதிரியும் ஆஜர் எதிரி ஓட்ட TN 65 AF 7573 என்ற யமாகா ஸ்கூட்டி வண்டியை எடுத்துக்கொண்டு இருட்டுரணிக்கு வந்தோம் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அப்போது என் அப்பா என்னிடமும், ஆஜர் எதிரியிடமும் எனது மாமா பால்பழனியிடமும் அதிகமாக தகராறு செய்ததால் ஆஜர் எதிரி என் அப்பாவை அடக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கீழே கிடந்த கட்டையை எடுத்து சும்மா கத்தாமல் கடக்குறியா என்ன என்று சொல்லி என் அப்பாவின் உச்சந்தலையில் ஓங்கி அடித்தார் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா கீழே விழுந்து சத்தம் இல்லாமல் கிடந்தார் என்றும், நானும் ஆஜர் எதிரியும் யாரிடமும் சொல்லாமல் மேற்சொன்ன வண்டியை எடுத்துக்கொண்டு கோரவள்ளி கிராமத்திற்கு போய் விட்டோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. காலையில்தான் என் அப்பா இறந்துவிட்டார் என்ற விவரம் எனக்குத் தெரியும் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அம்மாவிடம் இது பற்றிக்கூறவில்லை என்றும், நடந்த சம்பவத்தைப்பற்றி சொன்னால் ஆஜர் எதிரியை போலீஸ் பிடித்து ஜெயிலில் அடைத்துவிடுவார்கள் என்று பயந்துகொண்டு சொல்லாமல் இருந்துவிட்டேன் என போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 19.04.2023ம் தேதி ஆஸ்பத்திரிக்கு வந்த பொழுதுதான் நடந்த விவரத்தை நானும் மாமா பால்பழனியும் தாயாரிடம் சொன்னோம் என போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி என் சித்தி பையன் என்பதால் அவை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 22.01.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 3

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திருமதி. சுமதி என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுமதி | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

(எதிரி சுப்ரமணியன் என்ற அஜித் ஆஜர் )

<u>முதல் விசாரணை:</u>

நான் இராமநாதபுரம் தாலுகா இருட்டுரணி கிராமத்தில் வசித்து வருகிறேன். சலவைத் தொழில் செய்து வருகிறேன். எனக்கு 3 குழந்தைகள். ஆஜர் எதிரி எனக்கு தெரியும். அவர் எனது 2ம் பையன் ஆவார். சாட்சி சண்முகவேல் எனது கணவர் ஆவார். சாட்சி வீரையா எனது மச்சான் ஆவார். சாட்சிகள் ஆண்டி மற்றும் செல்வராஜ் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள். எனது கணவர் சண்முகவேலும் சலவைத் தொழில் செய்து வருகிறார். எனது மாமியார் பேச்சியம்மாள் கடந்த 04.04.2023 அன்று இறந்துவிட்டார். அதற்காக கடந்த

19.04.2023 தேதியன்று அவருக்கு கிருபை வைத்திருந்தோம். இந்த வழக்கில் இறந்துபோன காளிமுத்து அ.சா.1 ன் கணவர் மேற்படி காளிமுத்து கிருபை தினத்தன்று அளவுக்கதிகமாக மது அருந்திவிட்டு அனைவரிடமும் பிரச்சனை செய்தார். அதனால் வந்திருந்த உறவினர் அனைவரும் சாப்பிடாமல் கோபித்துக்கொண்டு போய்விட்டார்கள். நானும் கோபித்துக்கொண்டு வீட்டிற்கு சென்று விட்டேன் அன்று நள்ளிரவு 01.30 மணிக்கு அ.சா.1 எனக்கு போன் செய்து அ.சா.1ன் கணவர் கீழே விழுந்து அடிபட்டுவிட்டதாகவும், இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் சொன்னார். நான் காலையில் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனது அக்காள் கணவர் எவ்வாறு இறந்தார் என்று எனக்குத் தெரியாது. எனது அக்காள் கணவர் இறந்தது சம்மந்தமாக நான் எதுவும் கேள்விப்படவில்லை. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

<u>அரசுத் தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்றும், கடந்த 19.04.2023ம் தேதியன்று மாலை 06.00 மணியளவில் எனது மாமியார் இறந்து 16ம் நாள் காரியம் நடைபெற்றது என்றும், அந்த நிகழ்வில் அ.சா.1ன் கணவர் அளவுக்கதிகமாக மது அருந்திவிட்டு வந்து அனைவரிடமும் பிரச்சனை செய்தார் என்றும், என் உடன்பிறந்த தம்பி பால்பழனி மற்றும் அ.சா.1 ஐயும் அசிங்கமாக திட்டியதால் யாரும் சாப்பிடாமல் சென்றுவிட்டார்கள் என்றும், அ.சா.1ம் அவரது மகள் கவிதாவும் வீட்டை அடைத்துக்கொண்டு படுத்துவிட்டனர் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மகனான ஆஜர் எதிரியும், அ.சா.1 மகளான அனிதா இருவரும் அவரது ஊரான கோரவள்ளிக்கு

சென்றுவிட்டார்கள் என்றும், அன்று நள்ளிரவு 01.15 மணியளவில் என் அக்கா அ.சா.1 சத்தம் போடவும், நானும் என் கணவர் சண்முகவேலு என் மச்சான் வீரையா ஆகியோர் வெளியில் வந்து பார்த்த பொழுது காளிமுத்து கீழே கிடந்தார் என்றும், அவரை தூக்கி பார்த்த பொழுது உச்சந்தலையில் பலத்த இரத்தக்காயம் இருந்தது என்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. உடனே தலையில் ஏற்பட்ட காயத்திற்கு மஞ்சள் பொடியை தலையில் வைத்து அமுக்கி காயம்பட்ட என் அக்கா கணவர் காளிமுத்துவை நானும் எனது கணவர் சண்முகவேலு மற்றும் அ.சா.1 ராணியும் காளிமுத்துவை தாமரைக்குளம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றோம் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றால் சரியல்ல. மறு நாள் காலை அரசு மருத்துவர் காளிமுத்துவை பரிசோதனை செய்துவிட்டு இறந்துவிட்டார் என சொன்னார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மறு நாள் காலை அ.சா.1ம் மற்ற உறவினர்கள் உச்சிப்புளி காவல்நிலையம் சென்று காலை 10.00 மணிக்கு புகார் மனு கொடுத்தார்கள் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் நான் இருந்த பொழுது அ.சா.2 அனிதாவும், என் தம்பி பால்பழனியும் சொல்லித்தான் நடந்த சம்பவம் எனக்குத் தெரியும் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று அ.சா.1ன் கணவர் காளிமுத்து எனது தம்பி பால்பழனியிடம் தகராறு செய்ததால், பால்பழனி ஆஜர் எதிரிக்கும், அ.சா.2 அனிதாவிற்கும் போன் செய்து தகவல் சொன்னதாகவும், அவர்கள் இருவரும் 19.04.2023ம் தேதி இரவு 09.30 மணியளவில் கோரவள்ளி கிராமத்தில் இருந்து TN 65 AF 7573 என்ற யமாகா ஸ்கூட்டி வண்டியில் இரவு 01.00 மணியளவில் இருட்டூரணிக்கு வந்ததாகவும், அப்போது மேற்படி காளிமுத்து அவர்களையும், என் தம்பி பால்பழனியையும் அசிங்கமாக திட்டியதால், அமைதியாக இருக்கச்சொல்லியும் கேட்காததால், சத்தம் போடாமல் இருக்க வேண்டி கீழே

கிடந்த சவுக்குக்கட்டையை எடுத்து மேற்சொன்ன காளிமுத்துவின் தலையில் என் மகனான ஆஜர் எதிரி சுப்ரமணியன் இரண்டு முறை அடித்ததாகவும், அதனால் தலையில் காயம் ஏற்பட்ட காளிமுத்து சத்தம் இல்லாமல் கிடந்தவுடன் வண்டியை எடுத்துக்கொண்டு ஆஜர் எதிரி மற்றும் அ.சா.2 அனிதாவும் அங்கிருந்து சென்றுவிட்டதாக கேள்விப்பட்டேன் என போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் ஆஜர் எதிரி என் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 22.01.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 4

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு. பாண்டி என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாண்டி | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

(எதிரி சுப்ரமணியன் என்ற அஜித் ஆஜர் )

<u>முதல் விசாரணை:</u>

எனது சொந்த ஊர் இராமநாதபுரம் தாலுகா இருட்டூரணி ஆகும். தற்சமயம் தங்கச்சிமடம் கிராமத்தில் வசித்து வருகிறேன். தச்சு வேலைகள் செய்து வருகிறேன். சாட்சிகள் சண்முகவேலு, சுமதி, வீரையா, செல்வராஜ் ஆகியோர்களைத் தெரியும். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் எதுவும் கேள்விப்படவில்லை. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**<u>அரசுத் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், கடந்த 04.04.2023ம் தேதியன்று எனது பக்கத்து வீட்டை சேர்ந்த காளிமுத்துவின் தாயார் இறந்துவிட்டார், அவருக்கு 16ம் நாள் காரியம் செய்வதற்காக அவரது விட்டிற்கு 18.04.2023ம் தேதியன்று நான் சென்றிருந்தேன். அவரது உறவினர்களும் அங்கு வந்திருந்தார்கள். எனது பக்கத்துவீட்டை சேர்ந்த காளிமுத்து அதிகமாக மது அருந்திவிட்டு கத்திக்கொண்டிருந்தார் என்றும், அதனால் நானும், காளிமுத்து உறவினர்கள் நிறைய பேரும் காளிமுத்து வீட்டில் சாப்பிடாமல் சென்றுவிட்டோம் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 19.04.2023ம் தேதிஇரவு 01.15 மணியளவில் காளிமுத்து விட்டிலிருந்து அழுகை குரல் கேட்டதால் நான் வெளியே வந்து பார்த்ததால் காளிமுத்து உச்சந்தலையில் இரத்தக்காயத்துடன் கிடந்தார் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் அ.சா.1 ராணி, அ.சா.3 சுமதி, சுமதியின் கணவர் சண்முகவேலு, சுமதியின் மச்சான் வீரையா ஆகியோர் இருந்தார்கள் என்றும், மூப்பன்வலசை சேர்ந்த செல்வராஜ் ஆட்டோ டிரைவருக்கு போன் செய்து வரசெய்து காளிமுத்துவின் தலையில் மஞ்சள் பொடியை வைத்து அமுக்கி மேற்படி ஆட்டோவில் மேற்படி காளிமுத்துவை அ.சா.1, 3 மற்றும் அ.சா.3 ன் கணவர் சண்முகவேல், வீரையா ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டுசென்றார்கள் என போலீசார்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பின்பு தாமரைக்குளம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று முதல்சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அதிகாலை 03.15 மணிக்கு சென்று சேர்த்ததாகவும், அங்கு காளிமுத்து இறந்துவிட்டதாக டாக்டர்கள் கூறியதாக என்னிடம் சொன்னார்கள் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு உச்சிப்புளி காவல் நிலையத்தில் அ.சா.1 புகார்மனு கொடுத்தார் என்றும், பிரேத பரிசோதனைக்கு பிறகு உடலை பெறுவதற்காக நாங்கள் அனைவரும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு மறு நாள் சென்ற

பொழுதுதான் எனது ஊரைச்சேர்ந்த பால்பழனியும், அ.சா.2 ம், சொல்லித்தான் நடந்த சம்பவங்கள் எனக்குத் தெரியும் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று அனைவரும் விட்டிற்கு சென்ற பிறகு மேற்படி பால்பழனியிடம் அ.சா.1 கணவர் காளிமுத்து தகராறு செய்ததால் பால்பழனி அ.சா.2 அனிதாவுக்கும், ஆஜர் எதிரிக்கும் போன் செய்து தகவல் சொன்னதாகவும், அதனால் அவர்கள் இருவரும் TN 65 AF 7573 என்ற யமகா ஸ்கூட்டியை எடுத்துக்கொண்டு இரவு 01.00 மணியளவில் இருட்டு ஊரணி கிராமத்திற்கு வந்த பொழுது மேற்படி காளிமுத்து மேற்சொன்ன இருவரையும், மற்றும் பால்பழனியையும் அசிங்கமாக பேசியதால், ஆஜர் எதிரி கீழே கிடந்த சவுக்குக்கட்டையை எடுத்து காளிமுத்து தலையில் ஓங்கி அடித்ததாவும், அதனால் கீழே விழுந்த காளிமுத்து சத்தம் இல்லாமல் இருந்ததாகவும், மேற்சொன்ன இருவரும் கோரவள்ளி கிராமத்திற்கு சென்றுவிட்டதாகவும், நான் ஆஸ்பத்திரிக்கு சென்றிருந்த போது கேள்விப்பட்டேன் என போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு ஆஜர் எதிரி எனது சொந்த ஊரை சேர்ந்தவர் என்பதால் அவரை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். :** 183/2023

**நாள்:** 22.01.2024

**அரசு தரப்பு சாட்சி** : 5

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு. செல்வராஜ் என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வராஜ் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

(எதிரி சுப்ரமணியன் என்ற அஜித் ஆஜர் )

<u>முதல் விசாரணை:</u>

நான் மூப்பன் வலசை கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆட்டோ டிரைவராக தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ராணி, அ.சா.2 அனிதா, சாட்சி சாத்தான்குளம் பால்பழனி, சண்முகவேலு, சுமதி, பாண்டி ஆகியோர்களைத் தெரியும். சாட்சி வீரையாவை எனக்குத் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**<u>அரசுத் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், கடந்த 19.04.2023ம் தேதியன்று இரவு 01.20 மணியளவில் சிலர் எனக்கு போன் செய்து இருட்டுஊரணி கிராமத்தில் இருந்து பேசுவதாகவும், காளிமுத்து என்பவர் தலையில் காயம்பட்டு மயக்கமாக கிடப்பதாகவும், தாமரைக்குளம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல வேண்டும் ஆட்டோவை எடுத்து வாருங்கள் என்று சொன்னதால் நான் ஆட்டோவை எடுத்துக்கொண்டு இரைட்டைஊரணி கிராமத்திற்கு சென்றேன் என்றால் சரியல்ல. நான் சென்று பார்த்த பொழுது எனக்கு ஏற்கனவே தெரிந்த காளிமுத்து என்பவரின் உச்சந்தலையில் காயங்கள் ஏற்பட்டு மஞ்சள் பொடி வைத்து அமுக்கியிருந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால்  சரியல்ல. காயம்பட்ட காளிமுத்துவை அவரது அண்ணன் வீரையா, தம்பி சண்முகவேலு மற்றும் அ.சா.1,3 ஆட்டோவில் ஏற்றி வந்தார்கள் என்றும், அவர்களை தாமரைக்குளம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றேன் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிறகு மேல்சிகிச்சைக்காக அங்கிருந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அதிகாலை 03.15 மணியளவில் கொண்டு சென்று காண்பித்த பொழுது அங்கிருந்த மருத்துவர் காளிமுத்துவை பரிசோதனை செய்துவிட்டு காளிமுத்து இறந்துவிட்டதாக சொன்னார் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிறகு இறந்துபோன காளிமுத்துவின் உடலை இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில்வைத்துவிட்டு வந்துவிட்டேன் என்றால் சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி எனது ஊரின் பக்கத்து ஊரை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .